# A/L ORGANIC CHEMISTRY

## MODEL QUESTIONS

(WITH DETACHABLE ANSWERS)

# சேதன இரசாயனம்

## மீட்டல் - வினாக்கள்

## பரீட்சை மாதிரி வினாக்கள்

(குறிப்பு விடைகளுடன்)

த. சத்தீஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# A/L ORGANIC CHEMISTRY

## MODEL QUESTIONS

(WITH DETACHABLE ANSWERS)

# சேதன இரசாயனம்

## மீட்டல் - வினாக்கள்

## பரீட்சை மாதிரி வினாக்கள்

(குறிப்பு விடைகளுடன்)

## த. சத்தீஸ்வரன்

விலை ரூபா 66-00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. பியூட்டேன்

அல்கேன்களின் அமைப்பொத்த தொடரில் பியூற்றேனும் ($C_4H_{10}$) ஒன்றாகும்.

(அ) 1. "அமைப்பொத்த தொடர்" என்றால் என்ன?

2. அல்கேன்களின் பொதுச் சூத்திரம் என்ன? இவற்றின் பிரதான பண்புகள் என்ன?

(ஆ) பின்வருவனவற்றிலிருந்து பியூற்றேன் எவ்வாறு பெறப்படும்?

1. ஒரு புரோமோ பியூற்றேன் 2. பென்ரேனிக்கமிலம்
3. $CH_3CH_2CH_2CH_2MgBr$ 4. $CH_3CH_2COCH_3$

(இ) ஒவ்வொன்றும் ஒரு வளிமண்டல அமுக்கத்திலும் 400°K இலும் உள்ள 100cm³ பியூற்றேனும், 1000cm³ ஒட்சிசனும் எரிக்கப்பட்டன.

1. இத்தகனத்திற்கு சமன்பாடு எழுதுக?
2. அதே நிபந்தனைகளில் இத்தாக்கத்திற்கு பயன்படுத்தப்பட்ட ஒட்சிசனின் கனவளவு என்ன?
3. இந்நிபந்தனையில் இறுதிக் கனவளவு என்ன?
4. 300°K குளிரவிடப்பட்ட பின் இறுதிக் கனவளவு என்ன?

04. அல்கீன்




(அ) A தொடக்கம் F வரையுள்ள சேர்வைகளின் கட்டமைப்புகளை அறிக?

(ஆ) I, II, III, IV என்னும் தாக்கங்களுக்கான நிபந்தனைகளைத் தருக?

(இ) D ⟶ E + F எனும் தாக்கத்தில்,

1. பொருத்தமான தாழ்த்தல் நிபந்தனையைத் தருக?
2. தாழ்த்தல் நிபந்தனை இல்லாவிடின் விளைவுகள் என்ன?
3. B தோன்றும் தாக்கத்தின் வர்த்தகப் பயன் என்ன?

(ஈ) $CH_3 - CH(OSO_2CH) - CH_3$ இன் ஆக்கத்திற்கான பொறிமுறை ஒன்றைத் தருக?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05 அல்கீன்களின் தாக்க பொறிமுறை

(அ) $NaCl$, $KNO_3$, $Br_2$, $H_2O$ என்பவற்றைக் கொண்ட நீர்க் கரைசலின் ஊடாக புறப்பீன் வாயு நீண்டநேரம் செலுத்தப்பட்டது.

1. நோக்கல் என்ன? ஏன்?
2. இந்நிகழ்வின்போது விளைவாகக்கூடிய எல்லா விளைவுகளினதும் கட்டமைப்பையும், பெயரையும் தருக?
3. மேல் விளைவுகளில் காபன், ஐதரசன் தவிர்ந்த, காணப்படும் பொது மூலகம் எது?
4. மேலே 3 இற்கான விடையில் இருந்து நீர் எடுக்கும் முடிவு என்ன?
5. $NaCl$, $KNO_3$ என்பன பயன்படுத்தப்பட்டது ஏன்?
6. இத்தாக்கத்தில் விளைவாக்கப்படும் இடைநிலையின் கட்டமைப்பைத் தருக?

(ஆ) $NaCl$, $KNO_3$, $Br_{2(l)}$ என்பவற்றைக் கொண்ட எதரேல் கரைசலின் ஊடாக புறோப்பீன் வாயு நீண்டநேரம் செலுத்தப்பட்டது.

1. நோக்கல் என்ன? உண்டாகும் விளைவுகளின் கட்டமைப்பைத் தருக?
2. மேலே நீர் கூறிய விளைவுகள் உருவாகியதை
   (அ) எவ்வாறு விளக்குவீர்? (ஆ) எவ்வாறு நிரூபிப்பீர்?

06 அல்கீன்கள்

இவ்வினா பின்வரும் அல்கீன்களைப் பற்றியது ஆகும்:



(அ) இவ் அல்கீன்களின் பெயர்களைத் தருக?

(ஆ) A இன் மூலக்கூற்று வடிவத்தைத் தருக?

(இ) 1. கேத்திரகணித சமபகுதியத்தை காட்டுவதற்குத் தேவையான நிபந்தனைகள் எவை?
2. எவ் அல்கீன்கள் கேத்திரகணித சமபகுதியத்தைக் காட்டும்?
3. இவற்றில் ஒன்றின் கேத்திரகணித சமபகுதியங்களை வரைக?

(ஈ) B பல்பகுதியாக்கலில் ஈடுபட்டு வெப்பமிழக்கும் பல்பகுதியத்தைத் விளைவாக்கும்.

1. வெப்பமிழக்கும் பல்பகுதியம் என்பதால் விளங்குவது என்ன?
2. எவ்வாறு வெப்பமிழக்கும் பல்பகுதியங்கள் ஆக்கப்படும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. B உருவாக்கும் பல்பகுதியத்தின் பொதுச் சூத்திரம் என்ன? உபயோகம் என்ன?

07. அல்கேன்/அல்கீன்

(அ) 1. எதேன் 2. எதீன் என்பவற்றின் பிணைப்பு, வடிவம் என்பவற்றை வரைந்து காட்டுக?

(ஆ) C - C, C = C என்பவற்றின் சராசரி பிணைப்பு சத்திகள் முறையே 348, 612 KJ $mol^{-1}$ ஆனால் C = C பிணைப்பு C - C பிணைப்பிலும் தாக்கவல்லமை கூடியது. இதனை எவ்வாறு விளக்குவீர்?

(இ) எதீன், புரோமின் தாக்கத்தின் பொறிமுறையை எழுதுக?

(ஈ) HBr புறப்பீனை தாக்கி உண்டாகும் முக்கிய விளைவு இரு புரோமோபுரோப்பேன் ஆகும். ஒரு புரோமோ புரோப்பேன் அல்ல. இதனை எவ்வாறு விளக்குவீர்?

(உ) $CH_3CH_2CH_3$, $CH_3CH = CH_2$ என்பவற்றை வேறுபடுத்தி அறிய இரசாயனப் பரிசோதனை ஒன்று தருக?

08. அல்கையின்

இவ்வினா பின்வரும் அல்கையின்கள் பற்றியதாகும்:

A. $HC \equiv CH$ B. $CH_3C \equiv CH$ C. $CH_3C \equiv CCH_3$ D. $CH_3CH_2C \equiv CH$

(அ) இவ் அல்கையின்களின் வழமையான பெயர்களைத் தருக?

(ஆ) $CH_3 - CHBr - CH_2 - Br$ இல் இருந்து B ஐப் பெறுக?

(இ) B ஐ C ஆக மாற்றுக?

(ஈ) பின்வரும் மாற்றங்களை நிகழ்த்துக:

1. $A \longrightarrow C_2H_6$ 2. $B \longrightarrow CH_3 - CBr_2 - CHBr_2$

3. $C \longrightarrow CH_3COC_2H_5$ 4. $D \longrightarrow CH_3 - CBr_2 - CH_2 - CH_3$

(உ) A இன் மூலக்கூற்று வடிவம், பிணைப்பு என்பவற்றை வரைந்து காட்டுக?

09. பென்சீனின் கட்டமைப்பு

1865 ஆம் ஆண்டு கெக்குலே பென்சீனுக்கு பின்வரும் அமைப்பினை முன்மொழிந்தார்.



(அ) 1. இவ்வமைப்பு பென்சீனுக்கு உகந்ததல்ல என்பதற்கு என்ன ஆதாரங்கள் உண்டு?

2. மேலே காட்டப்பட்டிருக்கும் அமைப்பு ஒரு மாணவனால் பென்சீனுக்குக் கொடுக்கப்பட்டதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வமைப்பை மாணவன் வெளிப்படுத்தியதற்கு ஆதாரமாக அமையக்கூடிய இரு சான்றுகள் தருக?

(ஆ) வலுவளவின் அடிப்படையில் விஞ்ஞானிகளால் பென்சீனுக்குத் கொடுக்கப்பட்ட வேறு இரு அமைப்புகளை வரைந்து காட்டுக?

(இ) பென்சீனின் அமைப்பு எப்படிப்பட்டது?

(ஈ) பென்சீனில் கூட்டல் தாக்கங்களைவிட பிரதியீட்டுத் தாக்கங்களை சாதகமாக்கப்படும். இதனை எவ்வாறு விளக்குவீர்?

(உ) கருநாடிகளிலும் மீள்ரூட்டக் கருவிகளே பென்சீன் வளையத்தை இலகுவாகத் தாக்குகின்றன.

(ஊ) பென்சீனில் இருந்து பின்வருவனவற்றை எவ்வாறு பெறுவீர்?

1. $C_6H_5CH_2CH_3$ 2. $C_6H_5COCH_2CH_3$ 3.



10. <u>பென்சீனின் நைத்திரேற்றம்</u>

(அ) பென்சீனின் நைத்திரேற்றத்துக்குத் தேவையான தாக்கு பொருட்கள் நிபந்தனைகளைத் தருக?

(ஆ) 1. இத்தாக்கத்தில் மின்நாட்டக் கருவியாகத் தொழிற்படும் கூறு எது?

2. இது எவ்வாறு பயன்படுத்தப்பட்ட தாக்கு பொருட்களில் இருந்து உருவாகின்றது என ஒரு சமன்பாட்டில் தருக?

(இ) பென்சீனின் நைத்திரேற்றத் தாக்கத்தின் ஒரு பொறிமுறையைத் தருக?

(ஈ) 1. நைத்திரோ பென்சீனை உதாரணமாகக் கொண்டு "ஏவ்டல் விளைவு", "பரிவு" என்பவற்றால் நீர் விளங்குவது என்ன?

2. இவ்விரு விளைவுகளும் பயன்படுத்தப்பட்டு பென்சீன் வளையத்தில் இரண்டாவது நைத்திரோ கூட்டத்திற்கான நிலை எது?

11. <u>பென்சீனின் நைத்திரேற்றம்</u>

ஆய்வுகூடத்தில் பென்சீனை செறிந்த $HNO_3$ செறிந்த $H_2SO_4$ என்பவற்றின் கலவையுடன் தாக்கி நைத்திரோ பென்சீன் தயாரிக்கப்படும். இத்தாக்கம் பின்வரும் படிகளில் நிகழும்:

1. $HNO_3$, $H_2SO_4$ என்பவற்றின் தாக்கத்தால் புரோத்தன் ஏற்றப்பட்ட நைத்திரிக்கமிலம் தோன்றி நைத்திரோனியம் அயன் விளைவாதல்.

2. பென்சீன் வளையம் நைத்திரோனியம் அயனால் மின்நாட்ட தாக்கலுக்குட்பட்டு $C_6H_6NO_2^+$ உருவாகுதல்.

3. புரோத்தனை இழந்து $C_6H_5NO_2$ உருவாதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) 1. மின்நாட்டக் கருவி என்றால் என்ன?

2. 1, 2, என்னும் படிகளில் கூறப்பட்ட இடைநிலைகளின் கட்டமைப்பு என்ன?

3. நைத்திரோ பென்சீனின் ஆக்கத்தில் மேற்கூறப்பட்ட படிகளுக்கான சமன்பாடுகளை எழுதுக?

(ஆ) ஒரு பரிசோதனையில் 39 கிராம் பென்சீன் 50 கிராம் நைத்திரோ பென்சீனை கொடுத்தது.

1. நைத்திரோ பென்சீனின் விளைவு வீதம் என்ன?

2. விளைவு ஏன் 100% இல்லை என்பதற்கு இரு காரணந்தருக?

(இ) நைத்திரோ பென்சீன் ஓரிடப்பாடற்ற இலத்திரன் தொகுதியைக் கொண்டுள்ளது.

1. இதனால் நீர் விளங்குவது என்ன?

2. பென்சீன் வளையத்தின் ஓரிடப்பாடற்ற தன்மைக்கு மூன்று ஆதாரம் தருக?

1[illegible]. <u>மெதைல் பென்சீனின் தாக்கங்கள்</u>

கீழே காட்டப்பட்டிருக்கும் திட்டம் மெதைல் பென்சீனின் முக்கிய தாக்கங்களை உள்ளடக்குகின்றது.




(அ) A தொடக்கம் D வரையுள்ள சேர்வைகளின் கட்டமைப்பையும், பெயரையும் தருக?

(ஆ) தாக்கம் 1, 2, 3, 4 என்பவற்றின் தாக்கு பொருட்கள் நிபந்தனைகளைத் தருக?

(இ) $C_6H_5CHCl_2$ ஐ நீர் தயாரிக்க விரும்பினால் (மெதைல் பென்சீனின் குளோரின் ஏற்றத்தால்) தாக்கத்தினை எப்போது நிறுத்தவேண்டும் எனத் தீர்மானிப்பீர்?

(ஈ) மெதைல் பென்சீனின் நைத்திரேற்றம் பென்சீனிலும் இலகுவாக இருப்பதை எவ்வாறு விளக்குவீர்?

(உ) பின்வரும் மாற்றங்களை ஒரு படிமாற்றமாக நிகழ்த்துக:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) 

(3) 

(4) 

12. பின்வரும் சோடிகளை வேறுபடுத்தி அறிய இரசாயனப் பரிசோதனை தருக?

1. $(CH_3)_4C$ / $CH_2 = C(CH_3)_2$  2. $C_2H_4Cl_2$ / $C_2H_2Cl_2$

3. $CH_3CH = CH_2$ / $CH_3C \equiv C - CH_3$

4. $CH_3CH = CH_2$ / $CH_3CH = CH - CH_3$

5. $CH_3CH_2CH_2CH_2CH = CH_2$ / $CH_3CH_2CH = CH - CH_2CH_3$

6. $CH_3CH = CHCH_3$ / $CH_3 - \underset{CH_3}{\underset{|}{C}} = CH_2$

7. $CH_3C \equiv C - CH_3$ / $CH \equiv C - CH_2CH_3$

8. $CH_3CH_2C \equiv C - CH_2CH_3$ / $CH_3C \equiv C - CH_3$

9. 

10. 

11. 

12. 

13. <u>அல்ககோல்கள்</u>

நான்கு அல்ககோல்கள் A, B, C, D எனக் குறிப்பிடப்பட்டுள்ளன.

A. $CH_3 - CH_2 - CH_2 - CH_2 - OH$  B. $CH_3 - CH_2 - CHOH - CH_3$

C. $CH_3 - \underset{CH_2OH}{\underset{|}{CH}} - CH_3$  D. $(CH_3)_3 - C - OH$

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) இவ் அல்ககோல்களின் பெயர்களைத் தருக?

(ஆ) எவ் அல்ககோல்கள் சமபகுதியங்கள் ஆகும்?

(இ) வெவ்வேறு தாக்கங்களைப் பயன்படுத்தி பின்வருவனவற்றை எவ்வாறு வேறுபடுத்துவீர்?

1. A உம் B உம்   2. B உம் D உம்   3. C உம் D உம்

(ஈ) பின்வரும் மாற்றங்களை நிகழ்த்துக:

1. $A \longrightarrow CH_3CH_2CH_2CH_2O - \overset{\overset{O}{\|}}{C} - CH_3$

2. $C \longrightarrow CH_3 - \overset{\overset{CH_2}{\|}}{C} - CH_3$

(உ) எவ் அல்ககோலின் சமச்சீர் அற்ற காபன் உண்டு? உமது விடையை விளக்கி பரிசோதனை ஆதாரம் ஒன்றைத் தருக?

14 அல்ககோல்கள்

இவ்வினா பின்வரும் அல்ககோல்கள் பற்றியது:

A. $CH_3CH_2CH_2CH_2OH$   B. $CH_3 - CHOH - CH_3$   C. $(CH_3)_3 - C - OH$

D. $(CH_3)_2 - CH - CH_2OH$   E. $(CH_3)_3 - C - C(CH_3)_2 - CH$

F. $(CH_3)_3 - C - \underset{\underset{CH_3}{|}}{\overset{\overset{H}{|}}{C}} - OH$

(அ) E,F என்பவற்றின் பெயரைத் தருக?

(ஆ) இவ் அல்ககோல்களை எவ்வாறு வகைப்படுத்துவீர்? என்ன அடிப்படையில் அவற்றை வகைப்படுத்துவீர்?

(இ) ஒளியியல் தாக்கம் உள்ளது எது? ஏன்?

(ஈ) மு அயடோ மெதேன் தாக்கத்தினைக் கொடுப்பது எது? இத்தாக்கத்திற்குத் தேவையான தாக்கு பொருட்கள் எவை? விளைவுகளின் கட்டமைப்பு என்ன?

(உ) 1. A இன் கொதிநிலை ஏன் B இலும் அதிகம்?

2. C, D என்பவற்றில் கொதிநிலை கூடியது எது? ஏன்?

3. A இன் கொதிநிலை ஏன் $CH_3CH_2CH_2CH_2 - S - H$ இலும் கூடியது?

(ஊ) பின்வருவனவற்றை வேறுபடுத்த 2 இரசாயன பரிசோதனை தருக.

1. A உம் B உம்   2. E உம் F உம்

(எ) பின்வரும் மாற்றங்களை நிகழ்த்துக:

1. $A \longrightarrow CH_3CH_2CHO$   2. $B \longrightarrow CH_3CH = CH_2$

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(எ) ⅰ இன் சமபகுதியம் ஒன்று செறிந்த $H_2SO_4$ உடன் மூன்று சம பகுதிய விளைவுகளைக் கொடுத்தது. இச் சமபகுதியத்தின் கட்டமைப்பு என்ன? விளைவுகளின் கட்டமைப்பு என்ன?

15. சேதன ஐதரொட்சி சேர்வைகள்

பின்வரும் ஐதரொட்சி சேர்வைகளின் கொதிநிலை, $pK_a$ பெறுமானங்கள் தரப்பட்டுள்ளன:

| சேர்வை | கொதிநிலை/°C | $pK_a$ |
|---|---|---|
| மெதனோல் | 64.5 | 16 |
| எதனோல் | 78.5 | 18 |
| பீனோல் | 182 | 10 |
| மெதோனிக் அமிலம் | 101 | 3.8 |
| எதோனிக் அமிலம் | 118 | 4.8 |
| பென்சோயிக் அமிலம் | 249 | 4.2 |

(அ) பின்வருவனவற்றின் கொதிநிலை வேறுபாட்டினை எவ்வாறு விளக்குவீர்:

1. மெதனோலும், எதனோலும் 2. எதோனிக்கமிலம், எதனோல்

(ஆ) பின்வருவனவற்றின் அமில இயல்பு வேறுபாட்டினை எவ்வாறு விளக்குவீர்?

1. எதனோலும், எதோனிக்கமிலமும் 2. பீனோல், எதனோல்

(இ) மேல்தரப்பட்ட சேர்வை ஒன்றினை உதாரணமாகப் பயன்படுத்தி Ka என்னும் பதத்தினை விளக்குக?

(ஈ) மூலர் மெதனோல் கரைசலின் அயனுக்க அளவினைக் கணிக்க?

(உ) பின்வருவனவற்றை வேறுபடுத்தி அறிய ஒரு இரசாயனப் பரிசோதனை தருக?

1. $CH_3OH/CH_3CH_2OH$ 2. $HCO_2H/CH_3CO_2H$

3. $CH_3CO_2H/C_6H_5CO_2H$

16. பின்வரும் சோடிகளை வேறுபடுத்தி அறிய ஒரு இரசாயனப் பரிசோதனை தருக:

(அ) 1. $CH_3OH/CH_3CH_2OH$ 2. $CH_3CH_2OH/CH_3CH_2CH_2OH$

3. $CH_3CH_2CH_2OH/CH_3CHOHCH_3$

4. $CH_3CH_2CHOHCH_3/(CH_3)_3 - OH$

5. 

6. 

7. 

8. 

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. $C_6H_5 - \underset{CH_3}{\overset{CH_3}{C}} - OH$ / $C_6H_5 - CH - OHCH_3$

10. 


(ஆ) பின்வரும் தாக்க விளைவுகளைத் தருக:

1. 


2. 


3. 





17. காபனைல் சேர்வைகள்

A. $CH_3 - CH_2 - C \begin{smallmatrix} H \\ =O \end{smallmatrix}$ B. $\begin{smallmatrix} CH_3 \\ CH_3 \end{smallmatrix} > C = O$ C. $\begin{smallmatrix} CH_3 \\ CH_3CH_2 \end{smallmatrix} > C = O$

D. $CH_3CH_2 - CH_2 - C \begin{smallmatrix} H \\ =O \end{smallmatrix}$

(அ) ஒவ்வொரு சேர்வையினை பெயரையும் தருக?

(ஆ) பின்வரும் மாற்றங்களை எவ்வாறு நிகழ்த்தவீர்?

1. $CH_3CH_2OH$ ----> A  2. $CH_3COOH$ -----> B

3. $CH_3CBr_2CH_2CH_3$ ---> C

(இ) இந்நான்கு சேர்வைகளும் பல ஒத்த தாக்கங்களைக் கொடுக்கும். ஒவ்வொரு சேர்வைக்கும் பின்வரும் தாக்கம் ஒன்றினைத் தருக? (சமன்பாடு தரப்படல் வேண்டும்.)

1. கூட்டல் தாக்கம் 2. ஒடுக்கல் தாக்கம்

3. ஒட்சிசன் இடப்பெயர்ச்சி

(ஈ) பின்வரும் தாக்கங்களுக்கு ஒரு உதாரணத்தை சமன்பாட்டுடன் தருக.

1. B, C கொடுக்கும், A, D கொடாத ஒரு தாக்கம்

2. A, D கொடுக்கும், B, C கொடாத ஒரு தாக்கம்

(உ) பின்வருவனவற்றை வேறுபடுத்தி அறிய இரசாயனப் பரிசோதனை தருக.

1. A உம் B உம்  2. B உம் C உம்

(ஊ) A ஐ எவ்வாறு C ஆக மாற்றுவீர்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1 . அல்டிகையிட்டுக்கள்

A. HCHO B. $CH_3 - CHO$ C. $CCl_3CHO$ D. $(CH_3)_2 - CH - CHO$

E. $(CH_3)_3 - C - CHO$ F. $C_6H_5CHO$ G. $C_6H_5 - CH_2\ CHO$

(அ) C, D, E, G என்பவற்றின் பெயரைத் தருக?

(ஆ) 1. எப்படிப்பட்ட அல்டிகைட்டுக்கள் கனிற்சாரோவின் தாக்கத்திளைக் கொடுக்கும்?

2. இவ் அல்டிகைட்டுக்களில் எவை இத்தாக்கத்திளைக் கொடுக்கும்.

3. இத்தாக்கங்களுக்கான சமன்பாட்டினை எழுதுக?

(இ) பின்வருவனவற்றை வேறுபடுத்த ஒரு இரசாயனப் பரிசோதனை தருக?

1. A உம் B உம் 2. B உம் C உம்

3. B உம் F உம் 4. F உம் G உம்

(ஈ) B இல் இருந்து

1. $CH_3 - \underset{NH_2}{CH} - COOH$ எவ்வாறு பெறலாம்?

2. கேத்திரகணித, ஒளியியல் சமபகுதியம் இரண்டையும் காட்டும் ஒரு சேர்வையை எவ்வாறு பெறலாம் என சமன்பாடுகள் நிபந்தனைகளால் காட்டுக?

(உ) X, Y, Z என்னும் மூன்று போத்தல்கள் மேற்கூறிய அல்டிகைட்டுக்களில் ஒன்றை தனித்தனி கொண்டுள்ளது. இப் போத்தல்களில் உள்ள பதார்த்தங்கள் காரத்துடன் ஏற்படுத்திய தாக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

$$X \xrightarrow[\Delta\ H]{-\ OH} CH_3CH = CH - CHO$$

$$Y \xrightarrow{OH^-} CHCl_3 + HCO_2^-$$

$$Z \xrightarrow{OH^-} (CH_3)_3 - C - CH_2OH + (CH_3)_3 - C - CO_2^-$$

X, Y, Z என்னும் போத்தல்களிலுள்ள அல்டிகைட்டுக்கள் எவை?

1 . பியூட்டனோன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) A, B, C, D எனும் சேர்வைகளின் கட்டமைப்பைத் தருக?

(ஆ) C மேற்கூறிய தாக்கத்தின்படி விளைவாகும்போது இரு சமபகுதியங்களைக் கொண்ட கலவை உருவாக்கப்படும். இச்சமபகுதியங்கள் எவை? எவ்வாறு சாத்தியமாகும்? இவற்றை எவ்வாறு வேறுபடுத்தலாம்?

(இ) 1, 2, 3, 4 எனும் தாக்கங்களுக்கான தாக்கு பொருட்கள், நிபந்தனைகளைத் தருக?

(ஈ) பின்வரும் தாக்கங்களின் விளைவுகள் என்ன?

1. கொதிக்கும்  ஐ, ஐதான அமிலத்துடன் தாக்கும்போது,

2.  , $PCl_5$ ஐ தாக்கும்போது,

(உ) பியூட்டனோனுடன் சமபகுதியமாகவுள்ள காபனைல் சேர்வைகளின் கட்டமைப்பு என்ன?

(ஊ) பியூட்டனோனுடன் சமபகுதியமாக உள்ள ஒரு சேர்வை X அயடபோம் தாக்கத்தினைக் கொடுத்தது. இச்சேர்வைகள் X இன் கட்டமைப்பு என்ன? X ஐயும் பியூட்டனோனையும் வேறுபடுத்த இரு இரசாயனப் பரிசோதனைகள் (அயடபோம் தவிர்ந்த) தருக?

20. பின்வரும் சோடிகளை வேறுபடுத்தி அறிய இரசாயனப் பரிசோதனைகளை தருக.

1. $CH_2O/CH_3CHO$
2. $CH_2O/CH_3CH_2CHO$
3. $CH_3CHO/CH_3COCH_3$
4. $CH_3-\underset{\underset{O}{\parallel}}{C}-CH_3$ / $CH_3CH_2CH_2OH$
5. $CH_3CH_2CHBr_2/CH_3CBr_2-CH_3$
6. $CH \equiv CH$ / $CH_3C \equiv CH$
7. $C_6H_5CHO$ / $CH_3CHO$
8. $C_6H_5CHO$ / $C_6H_5CO-C_2H_5$
9. $C_6H_5COCH_3/C_6H_5COC_2H_5$
10. $CH_3CHO$ / $CCl_3-CHO$

(ஆ) பின்வரும் தாக்க விளைவுகள் என்ன?

1. $C_6H_5CHO \xrightarrow[\Delta H]{NH_3/AgNO_3}$

2. $C_6H_5CHO \xrightarrow[\Delta H]{CH_3CHO\ /\ \bar{O}H}$

3. $CH_3CH_2CHO \xrightarrow{ஐ\ NaOH}$

4. $CH_3CH=CHCHO \xrightarrow[\Delta H]{LiAlH_4}$

21. காபொட்சிலிக் அமிலங்களும் அவற்றின் பெறுதிகளும்

(அ) 1. எதனோயிக் அமிலத்தின் கட்டமைப்பினைத் தருக?

2. எதனோயிக் அமிலத்தில் காபனைல் கூட்டத்தின் ($>C = O$) தொழிற்பாடு நலிந்திருப்பது ஏன்? விளக்குக?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) பின்வருவனவற்றின் கட்டமைப்புகளைத் தருக:

1. எதோனைல் குளோரைட்டு  2. எதோனேமைட்டு
3. எதைல் எதோனேற்  4. எதோனிக்கு நீரிலி

(இ) பின்வருவனவற்றை எவ்வாறு தயாரிப்பீர்:

1. எதோனிக் அமிலத்திலிருந்து எதோனைல் குளோரைட்டு
2. எதோனிக் அமிலத்திலிருந்து எதோனேமைட்டு
3. எதோனிக் அமிலத்தை மட்டும் சேதனக் கூறாகக் கொண்டு ஆரம்பித்து எதைல் எதோனேற்.
4. எதோனைல் குளோரைட்டில் இருந்து எதோனிக்கு நீரிலி.

(ஈ) பீரோலானது நீர் கரைசல்களில் பென்சைல் ஏற்றப்படலாம். ஆனால் அசற்றல் ஏற்றம் சாத்தியமல்ல.

1. அசற்றலேற்றம், பென்சைல் ஏற்றம் என்பதால் விளங்குவது என்ன?
2. அசற்றல் ஏற்றம், பென்சைல் ஏற்றம் என்பவற்றுக்கு ஏன் வேறுபட்ட நிபந்தனைகள் தேவை?
3. மேலிரு தாக்கங்களினதும் விளைவுகளையும், அவற்றின் பெயர்களையும் தருக?

(உ) எதைல் எதோனேற் பின்வரும் சமன்பாட்டின்வழி நீர்ப்பகுப்படையும்;

$$CH_3-C(=O)OC_2H_5 + H_2O \rightleftharpoons CH_3COOH + C_2H_5OH$$

1. நீர்ப்பகுப்பு என்றால் என்ன?
2. இத்தாக்கத்தில் கீழே காட்டப்பட்டிருக்கும் பிணைப்புகளில் ஒன்று உடைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது:




இத்தாக்கத்தின் சரியான பொறிமுறையை தீர்மானிப்பதற்கு ஒரு முறையைத் தருக?

(ஊ) எத்தோனிக்கு நீரிலியை $SO_3$, $N_2O_5$, $P_2O_5$ உடன் ஒப்பிடும் போது என்ன பொது உடைமையைக் கொண்டுள்ளது?

2. எசுத்தர்கள்

(அ) $C_4H_8O_2$ என்னும் சூத்திரத்தையுடைய $-C(=O)O-$ கொண்ட சேர்வைகளின் கட்டமைப்பையும் பெயரையும் தருக?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) $C_4H_8O_2$ என்னும் சேதனச் சேர்வை X, NaOH இல் கரையவில்லை. நீண்ட நேரம் மீளப்பாய்ச்சியபோது ஒரு கலவை பெறப்பட்டது. இக்கலவை அயடபோம் தாக்கத்தையோ அல்லது வெள்ளி ஆடிப் பரிசோதனையையோ கொடுக்கவில்லை.

1. X இன் கட்டமைப்பு என்ன?
2. $CH_3COOH$ இல் இருந்து X இனைத் தொகுக்க?

(இ) அமில ஊக்கி முன்னிலையில் எதனோல், அசற்றிக்கமில தாக்கத்தின் பொறிமுறையைத் தருக?

(ஈ) $CH_3-CH_2-CH(Cl)-C(=O)-O-CH_2CH_3$ இன் I.U.P.A.C பெயர் என்ன?

(உ) வேறுபடுத்தி அறிய இரசாயனப் பரிசோதனை தருக?

1. ~~$H-COOCH_3$ | $CH_3-COOH$~~ 2. $CH_3COOC_2H_5$ | $HCOOCH_2-CH_2-CH_3$

3. $CH_3COO\ C_2H_5$ | $CH_3CH_2CO_2CH_3$ 4. $HCOOH$ | $CH_3COOH$

5. $Cl-CH_2-CO_2H$ | $CH_3COOH$ 8.  $-OH$ / $CH_3\ COOH$

6. $CCl_3\ COOH$ / $CCl_3-CH_2COOH$ 9. $Cl-CH_2COOH$ / $CH_3-COCl$

7. $CH_3-CH(OH)-COOH$ / $CH_2OHCH_2CH_2COOH$

10.




2. பீனோல், எதனோல் என்பவற்றின் தாக்கங்கள்

(அ) பீனோல், எதனோல் என்பவற்றின் பின்வரும் தாக்கங்களை ஒப்பிடுக:

1. NaOH 2. $K_2Cr_2O_7/H^+$ 3. $H^+/CH_3COOH$ 4. HBr

(ஆ) எதனோலின் $-O-H$ கூட்டம் இலகுவாக அகற்றப்படக்கூடியது ஆனால் பீனோலில் அல்ல இதனை எவ்வாறு விளக்குவீர்?

(இ) பீனோலின் பின்வரும் தாக்கத்திற்கு சமன்பாடு தருக:

1. $Br_2 \cdot H_2O$ 2. Dil $HNO_3$

(ஈ) பீனோலை ஐதான $HNO_3$ அமிலமே நைத்திரேற்றப் போதுமானது. ஆனால் பென்சீனை நைத்திரேற்ற செறி $HNO_3$ / $H_2SO_4$ கலவை தேவைப்படுகின்றது. இதனை எவ்வாறு விளக்குவீர்?

(உ) (1) 4 நைத்திரோபீனோல் ஏன் பீனோலிலும் அமில வலிமை கூடியது?
(2) இதற்கு பரிசோதனை சான்று தருக?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஊ)




1, 2, 3, 4 என்னும் தாக்கங்களுக்கான தாக்கு பொருட்கள் நிபந்தனைகள் தருக?

(எ) பீனோலுக்கு இரு இரசாயனப் பரிசோதனைகளை நோக்கலுடன் தருக?

(ஏ) பீனோலின் கைத்தொழில் உபயோகம் இரண்டினைத் தருக?

24. நைதரசனைக் கொண்ட சேதனச் சேர்வைகள்

அமீன்கள்

(அ) பின்வரும் அலிபற்றிக் சேர்வைகளின் கட்டமைப்பு ஒன்றினைத் தருக.

1. ஒரு முதல் அமீன் 2. ஒரு வழி அமீன்

3. ஒரு புடை அமீன் 4. ஒரு சதுர் அமோனியம் உப்பு

(ஆ) முதல் அமீனை தயாரிப்பதற்கான மூன்று முறைகளை சமன்பாடு ஒன்றினால் தருக?

(இ) பின்வருவனவற்றை தயாரிப்பதற்கான ஒரு முறையைத் தருக?

1. பிரதியிடப்பட்ட ஏமையிட்டில் இருந்து வழி அமீன்

2. புடை அமீன் ஒன்று

3. புடை அமீனில் இருந்து சதுர் அமோனியம் உப்பு

(ஈ) அலிபற்றிக் முதல் அமீன்கள் ஏன் அமோனியாவிலும் சிறந்த மூலங்கள் என விளக்குக?

(உ) $CH_3NH_2$ இன் நீர்க்கரைசல் செப்பு சல்பேற்றுக் கரைசலுக்கு சேர்க்கப்படும்போது நோக்கல் என்ன?

இந் நோக்கலுக்கு ஆன காரணம் என்ன?

25. அமீன்களின் அயனுக்க மாறிலியும், கொதிநிலைகளும்

| அமீன் | கொதிநிலை °C | $pK_a$ |
|---|---|---|
| மெதையில் அமீன் | - 6.3 | 10.6 |
| இரு மெதையில் அமீன் | 7.4 | 10.8 |
| மும் மெதைல் அமீன் | 3.5 | - |
| பீனையில் அமீன் | 184 | 4.6 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) மும் மெதையில் அமீனின் $pK_a$ பெறுமானத்தை அளவிட்டு காரணத்தை விளக்குக?

(ஆ) இரு மெதையில் அமீனின் இணை அமிலத்தின் கட்டமைப்பு என்ன?

(இ) பின்வருவன ஏன் என விளக்குக:

1. $CH_3NH_2$ இன் கொதிநிலை மெதேனிலும் கூடியது.

2. $CH_3NH_2$ இன் கொதிநிலை மெதநோலிலும் குறைவானது.

3. இரு மெதையில் அமீனின் கொதிநிலை மும்மெதையில் அமீனிலும் கூடியது.

(ஈ) பின்வருவனவற்றை வேறுபடுத்த இரசாயனப் பரிசோதனை தருக:

1. $CH_3NH_2$ |  $-NH_2$    2.  $-NH_2$ |  $-CH_2NH_2$

(உ) 1. மூலர் இரு மெதையில் அமோனியம் குளோரைட்டின் pH ஐ கணிக்க?

26. நைதரசனைக் கொண்ட சில சேதனச் சேர்வைகள் தரப்பட்டுள்ளன:

A. $NH_3$    B. $C_2H_5NH_2$    C. $(C_2H_5)_2NH$

D. $(C_2H_5)_3N$    E. $C_2H_5CONH_2$

(அ) C, D என்பவற்றின் பெயர் என்ன?

(ஆ) A இன் கட்டமைப்பில் என்ன இயல்பு அதன் மூலத் தன்மைக்கு காரணமாகும்? ஒரு சமன்பாட்டின் மூலம் விளக்குக?

(இ) மூல இயல்பு இறங்கும் வரிசையில் A, B, E, C என்பவற்றை ஒழுங்குபடுத்தி உமது விளக்கத்தையும் தருக?

(ஈ) B, C என்பவற்றில் மூல இயல்பு கூடியது எது? ஏன்?

(உ) C, D என்பவற்றை வேறுபடுத்தி அறிய இரசாயனப் பரிசோதனை ஒன்று தருக?

(ஊ) பின்வரும் தாக்க விளைவுகளின் கட்டமைப்பினைத் தருக:

1. D உம் $CH_3CH_2Br$    2. B உம் $CH_3COCl$ உம்

3. F உம் $C_6H_5COCl$ உம்

(எ) பின்வரும் மாற்றங்களைத் தருக:

1. E $\longrightarrow$ B    2. E $\longrightarrow CH_3CH_2CH_2NH_2$

27. பீனையில் அமீன்

(அ) பென்சீனில் இருந்து பீனையில் அமீனைப் பெறுவதற்கான திட்டம் ஒன்றினைத் தருக? சமன்பாடுகள் நிபந்தனைகள் தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) புரோமின் நீரைப் பயன்படுத்தி பீனையில் அமீனை புரோமீன் ஏற்றியபோது 2, 4, 6 மு புரோமோ பென்சீன் தோன்றியது.

1. 2, 4, 6 மு புரோமோ பென்சீனின் கட்டமைப்பினைத் தருக?

2. பீனையில் அமீனின் புரோமின் ஏற்றம் ஏன் பென்சீனிலும் இலகுவானது?

3. புரோமின் ஏற்றம் 2, 4, 6 நிலைகளில் நடைபெறுவது ஏன்?

(இ) பரா நைத்திரோ அனிலீன் ஆனது, பீனையில் அமீனை அசற்றலேற்றி, நைத்திரேற்றி நீர்ப்பகுத்து பெறப்படும்.




1. 1, 2, 3 என்னும் படிகளுக்கான தாக்குப் பொருட்கள், நிபந்தனைகளைத் தருக?

2. 2 நைத்திரோ சமபகுதியம் சிறிய அளவில் உண்டாவதற்கு என்ன விளக்கம் கொடுப்பீர்?

3. நைத்திரேற்றுக்கு முன்னர் $-NH_2$ கூட்டத்தின் தொழிற்பாடு தடுக்கப்படுவது ஏன்?

(ஈ) பின்வரும் சோடிகளை வேறுபடுத்த இரசாயனப் பரிசோதனை தருக.




28. பென்சீன் ஈரசோனியம் அயன்

(அ) பென்சீன் ஈரசோனியம் அயனின் கட்டமைப்பு என்ன?

(ஆ) இவ்வயனின் நீர்க்கரைசல் ஒன்றை எவ்வாறு தயாரிப்பீர்?

(இ) பென்சீன் ஈரசோனியம் அயனை பின்வருவனவாக எவ்வாறு மாற்றுவீர்:

1. புரோமோ பென்சீன் 2. பீனோல்

3. பென்சோயிக் அமிலம் 4. பென்சீன் 5. பீனையில் ஐதரசீன்

(ஈ) NaOH இல் பீனோலைக் கொண்ட கரைசல், குளிர்ந்த ஈரசோனியம் அயனுடன் சிவந்த மஞ்சள் வீழ்படிவைக் கொடுத்தது.

1. விளைவின் கட்டமைப்பையும் பெயரையும் தருக?

2. இத்தாக்கத்தின் பெயர் என்ன?

3. இந்நிறத்துக்கு விளைவின் மூலக்கூற்று அமைப்பிலுள்ள எப்பிணைப்புக் காரணமாகும்?

இதற்கு என்ன விளக்கம் கொடுப்பீர்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. அமீன்




(அ) 1. சேர்வை A இன் கட்டமைப்பினை பிணைப்புகளைக் காட்டி வரைக?

2. D உருவாகும் தாக்கத்தின் இரசாயனத் தாக்கத்தினை (நோக்கமுடன்) விளக்குக?

(ஆ) 1. C இன் கட்டமைப்பு என்ன?

2. C எந்த வகுப்பை சார்ந்தது?

3. ஒரு திரவ அமீனில் இருந்து C போன்ற ஒரு திண்மப் பளிங்குப் பெறுதியைத் தயாரிப்பதில் உள்ள பெறுமதி என்ன?

(இ) 1. தாக்கம் X எவ்வகையானது? 2. தாக்கம் Y எவ்வகையானது?

3. தாக்கம் Y இல் வெப்பநிலை 5°C இலும் கருதத்தக்க அளவு அதிகரிக்கும்போது என்ன நிகழும்?

4. சேர்வை B இன் குடும்பத்திலுள்ள, சேர்வைகளை ஆக்குவதில் உள்ள செய்முறை உபயோகம் என்ன?

5. தரப்பட்ட அமீன் R - $NH_2$ அலிபற்றிக்கா? அல்லது அரோமற்றிக்கா? ஏன்?

6. தாக்கம் Y இனை கொடுக்கும் உண்மையான சேர்வை ஒன்றின் கட்டமைப்பையும், இத் தாக்கத்தைக் கொடாத இச்சேர்வையின் சமபகுதியம் ஒன்றின் கட்டமைப்பையும் தருக?

30. குளோரோ நைத்திரோ பென்சீன்

பென்சீன் வளையத்துக்கு தொடுக்கப்பட்டிருக்கும் குளோரீன் தாக்குதிறன் வளையத்துக்குத் தொடுக்கப்பட்டிருக்கும் நைத்திரோ கூட்டத்தால் எவ்வாறு செல்வாக்கு அடைகின்றது என்பதைக் கீழுள்ள அட்டவணை காட்டுகின்றது.

இப்பரிசோதனையில் இச்சேர்வைகள் $CH_3ONa$ உடன் தாக்க விடப்பட்டு - Cl கூட்டம் - $OCH_3$ ஆல் பிரதியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பெயர் | கட்டமைப்பு | சார்பு தாக்குதிறன் |
|---|---|---|
| A. குளோரோ பென்சீன் |  | $10^{-4}$ |
| B. 2 குளோரோ நைத்திரோ - பென்சீன் |  | 01 |
| C. - |  | 04 |
| D. குளோரோ 2, 4 இரு நைத்திரோ பென்சீன் |  | 3200 |
| E. - |  | $10^6$ |

(அ) C, E என்பவற்றின் பெயர் என்ன?

(ஆ) ஏதாவது ஒரு குளோரோ நைத்திரோ பென்சீனைத் தெரிந்து இதன் தாக்க வேகம் ஏன் குளோரோ பென்சீனிலும் அதிகம் எனக் கூறுக?

(இ) B, C, D, E இலகுவில் நீர்ப்பகுப்படைந்து ஒத்த பீனோல்களைக் கொடுத்தது. இப் பீனோல்களை அமிலத்திறன் இறங்குவரிசையில் ஒழுங்கு செய்து விளக்குக?

(ஈ) பின்வருவனவற்றை வேறுபடுத்த இரசாயனப் பரிசோதனை தருக.

1. 

2. 

(உ) 25°Cஇல் 2, 4 இரு நைத்திரோ பீனோலின் $pK_a$ 4, 0.01M கரைசலின் pH ஐக் கணிக்க?

21. அலசனைக் கொண்ட சேதனச் சேர்வைகள்

சில அலசன் சேர்வைகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

A. $CH_3CH_2COCl$ B. $CH_3CH_2CH_2Cl$ C. $CH_3CCl_2CH_2CH_3$

D. $CH_3CHBrCH_2CH_3$

 E.  F. 

(அ) D, E, G என்பவற்றின் பெயர் என்ன?

(ஆ) இவற்றுள் எவை (1) அலசனோ அல்கேன்கள்

(2) அரோமற்றிக் அலசன்கள் (3) அமில குளோரைட்டுக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) A, B,F என்பவற்றை அமோனிய நீர்க் கரைசலுடன் தாக்கமுறும் திறனை வரிசையில் தருக?

(ஈ) பின்வரும் மாற்றங்களை நிகழ்த்துக:

1. A ---------> எதைதயில் புரோப்பியுனேற்
2. C ---------> பியூட்டன் ஒன்
3. D ---------> 2 ஐதரொட்சி பியூட்டென்
4. F ---------> E

(உ) பின்வருவனவற்றை எவ்வாறு தயாரிப்பீர்?

1. $CH_3CH_2COOH$ -----> A  2. $C_6H_6$ -------> F

(ஊ) எச்சேர்வை ஒளியியல் சமபகுதியத்தைக் காட்டும்? ஏன்?

32. குளோரினைக் கொண்ட சேதனச் சேர்வைகள்

இவ்வினா பின்வரும் சேர்வைகள் பற்றியதாகும்:

A. 
B. 
C. 
D. 

(அ) A, B என்பவற்றின் பெயர் என்ன?

(ஆ) கார நீர்க்கரைசலுடன் இச் சேர்வைகளின் தாக்குதிறன் வரிசை என்ன?

(இ) பின்வரும் தயாரிப்புகளுக்கான தாக்குப் பொருட்கள், நிபந்தனைகள் என்பவற்றைத் தருக:

1. தாய் அமிலத்திலிருந்து A
2. தாய் அற்ககோலில் இருந்து B  3. பென்சீனிலிருந்து D

(ஈ) A,B என்பவற்றுடன் பொருத்தமான அசேதன தாக்கு பொருட்களையும் பயன்படுத்தி



என்னும் சேர்வையை தொகுக்க?

(உ) D இல் C-Cl பிணைப்பின் உயர் உறுதித் தன்மையை எவ்வாறு விளக்குவீர்?

(ஊ) C, D என்பவற்றை வேறுபடுத்த இரசாயனப் பரிசோதனை தருக?

33. கிருநாட்டின் சோதனைப் பொருள்

(அ) கிருநாட்டின் சோதனைப் பொருள் என்றால் என்ன?

(ஆ) மெதைல் மகனீசியம் அயடைட்டு எவ்வாறு தயாரிக்கப்படும் என்பதை சமன்பாடு நிபந்தனைகளால் தருக?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) $CH_3$ Mg - I பின்வருவனவற்றுடன் ஏற்படுத்தும் தாக்கத்தில் விளைவுகளை சமன்பாடு ஒன்றினால் தருக:

1. $H_2O$ 2. $H-C\equiv C-H$ 3. $CH_3COOH$
4. $Br_2$ 5. $CO_2$ 6. $C_2H_5OH$

(ஈ) $CH_3$ - MgI இல் இருந்து பின்வருவனவற்றை எவ்வாறு பெறுவீர்?

1. $CH_3CH_2OH$ 2. $CH_3CHOHCH_3$ 3. $(CH_3)_3-C-OH$

(உ) பின்வரும் மாற்றங்களை நிகழ்த்துக:




பரீட்சை மாதிரி வினாக்கள்

0 . புறொப்பனல், புறப்பனோன் என்பவற்றில் இருந்து புறொப்பீன் தோன்றுவதற்கான இரு படிமுறை கீழே காட்டப்பட்டுள்ளது:




(அ) 1. W, X, Y, Z என்பவற்றின் கட்டமைப்புகளைத் தருக?

2. W, X என்னும் சேர்வைகளின் ஆக்கத்துக்கு தாழ்த்தல் எவ்வாறு நிகழ்த்தப்படும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) 1. இப்படிமுறை மீள நிகழ்த்தப்பட்டால் அதாவது விளைவாக்கப்பட்ட அல்கீன், நீர் ஏற்றப்பட்டு ஒட்சி ஏற்றப் படும்போது திரும்பவும் காபனேயில் சேர்வை விளைவாகுமா? அப்படியாயின் விளைவுகளின் கட்டமைப்பு என்ன?

2. உமது விடையை விளக்குக?

(இ) 1. $CH_3CH_2CHO$, $CH_3COCH_3$ என்பவற்றை அமில KCN உடன் தாக்கி விளைவை நீர்பகுக்கும்போது பெறப்படும் விளைவுகளின் கட்டமைப்பு என்ன?

2. மேல் விளைவாக்கப்பட்ட இருசம பௌதீக விளைவுகளும் வேறுபடும் முக்கிய பௌதீக இயல்பு ஒன்றை ஒரு விளைவு காட்டுகின்றது. இவ்விளைவு எது? இது ஏன் சாத்தியமாகும்?

3. மேல் இரு விளைவையும் வேறுபடுத்தி அறிய ஒரு இரசாயனப் பரிசோதனை தருக?

(ஈ) 1. A, B, C என்பவற்றின் கட்டமைப்பு என்ன?

2. A ஐ செறிந்த $H_2SO_4$ உடன் வெப்பமாக்கும்போது உண்டாகும் மூன்று சமபகுதிய விளைவுகள் எவை?

3. C ---> X என்னும் மாற்றத்துக்குத் தேவையான சோதனைப் பொருட்கள் எவை?

$CH_3CH_2CHO$, $CH_3COCH_3$ வேறுபடுத்தி அறிய மூன்று இரசாயனப் பரிசோதனைகள் தருக?

02 சேர்வை A ஒரு உப்பாகும். இதில் இருந்து இரு அல்ககோல்கள் E, F என்பன விளைவாக்கப்படும் திட்டம் ஒன்று கீழே காட்டப் பட்டுள்ளது.

(அ) A தொடக்கம் F வரையுள்ள சேர்வைகளின் கட்டமைப்பையும் பெயரையும் தருக?

(ஆ) பின்வரும் மாற்றங் களுக்கான தாக்குப் பொருட்கள் நிபந்தனைகளைத் தருக?




1. B ---> D 2. B ---> C 3. C ---> E or D ---> F

பின்வருவனவற்றை வேறுபடுத்தி அறிய இரசாயனப் பரிசோதனை தருக:

1. A உம் B உம் 2. E உம் F உம் 3. C யும் D உம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஈ) பின்வருவனவற்றில் இருந்து B ஐ பெறுவதற்கான திட்டம் ஒன்றினை சமன்பாடுகளால் நிபந்தனைகளால் தருக?

1. C    2. D

(உ) எதனோலை பெரும்படியாக பெறுவதற்கான முறை ஒன்றினைச் சமன்பாடுகளால் நிபந்தனைகளால் தருக?

03. (அ) பின்வரும் சேர்வைகளின் பெயர்களைத் தருக:

A. $CH_3CH_2CH_2NH_2$    B. $CH_3CH_2CONH_2$

C. $C_6H_5NH_2$    D. $CH_3CH_2CO_2NH_4$

(ஆ) 1. இவற்றுள் எச்சேர்வைகள் NaOH நீர்க்கரைசலுடன் வெப்பமாக்கும்போது அமோனியாவைக் கொடுக்கும்?

2. இத்தாக்கங்களுக்கான சமன்பாடுகளை எழுதுக?

(இ) இவற்றை மூலத்திறன் இறங்குவரிசையில் ஒழுங்குபடுத்துக:

(ஈ) பின்வரும் மாற்றங்களுக்கு பயன்படுத்தப்படும் தாக்குப் பொருட்கள் நிபந்தனைகளைத் தருக:

1. B -------> A    2. B -------> $CH_3CH_2NH_2$

3. D -------> B    4. B -------> $CH_3CH_2CN$ ----> A

(உ) 1. C இல் இருந்து ஒரு ஈரசோனியம் உப்பு ஒன்றினைப் பெறுவதற்கான தாக்குப்பொருட்கள் நிபந்தனைகள் எவை?

2. ஈரசோனியம் உப்பினை ஒரு சாயமாக மாற்றுக?

3. C இலிருந்து பெறப்படும் ஈரசோனியம் உப்பு A இல் இருந்து பெறுவதிலும் சார்பு அளவில் உறுதியாக இருப்பது ஏன் என விளக்குக?

04. சேர்வை W ஐ தொகுப்பதற்கான திட்டம் ஒன்றினை கீழ் வரைபு காட்டுகின்றது.




(அ) Q, R, T, V என்னும் சேர்வைகளின் கட்டமைப்பு என்ன?

(ஆ) p, r, s, t, v என்னும் தாக்குப் பொருட்கள் அல்லது நிபந்தனைகள் அல்லது இரண்டையும் தருக?

(இ) W இல் இருந்து நீர் அகற்றப்பட்டு உண்டாகும் விளைவு Z இன் கட்டமைப்பு என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஈ) W இல் (1) - $CO_2H$ (2) - OH கூட்டங்கள் இருப்பதை எவ்வாறு காட்டுவீர்?

(உ) 1. W ஒளியியல் சமபகுதியத்தைக் காட்டுகின்றது. இவ் ஒளியியல் சமபகுதியங்களை வரைந்து காட்டுக?

2. இவ்விரு சமபகுதியங்களையும் வேறுபடுத்த ஒரு பௌதீக முறையைத் தருக?

3. W ஆனது மேற்காட்டப்பட்ட எந்தப் பாதையினால் தயாரிக்கப்பட்ட போதிலும் ஒளியியல் தாக்கத்தினைக் காட்டவில்லை. இதனை எவ்வாறு விளக்குவீர்?

05. புரோமோ ஈதேனைக் கொண்டு தொடங்கும் ஒரு தொகுப்பினை கீழ் வரைபு காட்டுகின்றது.




(அ) A,B,C,D என்னும் சேர்வைகளின் கட்டமைப்பினைத் தருக?

(ஆ) 1, 2, 3 என்னும் தாக்கங்களுக்கான தாக்குப்பொருட்கள் நிபந்தனைகளைத் தருக?

(இ) D இன் ஒத்த வகுப்பைச் சேர்ந்த D இன் வேறு சம பகுதியங்கள் நான்கு தருக?

(ஈ) 1. B இன் வேறு சமபகுதியங்கள் மூன்றின் கட்டமைப்பினைத் தருக?

2. மேலே நீர் கூறிய சமபகுதியங்களை எவ்வாறு வேறுபடுத்தி அறிவீர்?

(உ) தாக்கங்கள் 3, 4 என்பவற்றின் பொறிமுறைச் சமன்பாடுகளைத் தருக?

06 (அ) 1. C,H,O மாத்திரம் உடைய விரி சங்கிலிச் சேதனச் சேர்வை X இல் காபன் 58.82% திணிவுப்படி ஐதரசன் காபனின் ஆறில் ஒரு பங்காகும். X இன் சார் மூலக்கூற்றுத் திணிவு 102 எனின் X இன் மூலக்கூற்றுச் சூத்திரத்தைக் கணிக்க?

(C = 12, H = 1, O = 16)

2. ஒளியியல் தாக்கமுடைய X

(அ) Na உடன் தாக்கமுறமாட்டாது ஆனால் NaOH முன்னிலையில் நீர்ப்பகுப்பு அடையும்.

(ஆ) பிராடியின் சோதனைப் பொருளுடன் வீழ்படிவைத் தராது. ஆனால் தொலனின் சோதனைப் பொருளுடன் வெள்ளி ஆடியைத் தரும் X இன் கட்டமைப்பினை உய்த்தறிக?

(ஆ) பின்வரும் மாற்றங்களில் பயன்படுத்தும் தாக்குப் பொருட்களையும் நிபந்தனைகளையும் தருக?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) 1. $CH_2 = CH(NH_2) - COOH$ இன் I.U.P.A.C பெயரைத் தருக?

2. இச்சேர்வையில் (a) $-NH_2$ (b) $-COOH$ (c) $>C=C<$ இருப்பதை எவ்வாறு காட்டுவீர்?

07. பின்வரும் சோடிகளை வேறுபடுத்தி அறிய இரசாயனப் பரிசோதனைகள் தருக?

(அ) 1. $CH_3CONH_2 / CH_3CO_2NH_4$

2. 

(ஆ) பென்சீன் நீரில் கரையமாட்டாது. 80.1°C இல் கொதிக்கும். பீனோல் குளிர் நீரில் ஓரளவு கரையும் 182°C இல் கொதிக்கின்றது. இவ்விரு சேர்வைகளின் இயல்பு வேறுபாட்டுக்கான காரணத்தை விளக்குக?

(இ) பின்வரும் தாக்கங்களில் பெறப்படும் பிரதான விளைவுகள் என்ன?

1. $HO_2C - CH_2 - CH_2 - CO_2H + CH_3 - CH(OH) CH_2 - OH \xrightarrow{H_2SO_4}$

2. 

(ஈ) பென்சீனின் நைத்திரேற்றத் தாக்கத்தின் பொறிமுறை அட்டவணைத் தருக? பின்வரும் சேர்வைகளை மூலத்திறன் வரிசையில் ஒழுங்கு செய்க?

$NH_3$, $C_2H_5NH_2$, $C_2H_5CONH_2$, $C_6H_5NH_2$

08. 3, 5 இரு ஐதரொட்சி தொலுயீனின் ஆக்கத்துக்கான பாதை கீழே காட்டப்பட்டுள்ளது.

$$\underset{C_7H_8}{A} \longrightarrow \underset{(C_aH_bN_cO_d)}{B} \xrightarrow{Sn/செ\ HCl} \underset{C_7H_{10}N_2}{C} \dashrightarrow \underset{C_7H_8O_2}{D}$$

(அ) 1. B இன் நிறை வீத அமைப்பு 46.2% காபன், 3.3% ஐதரசன், 15.4% நைதரசன் மிகுதி ஒட்சிசன் ஆகும். B இன் அனுபவ சூத்திரத்தைக் காண்க?

2. B இன் மூலக்கூற்று சூத்திரத்தை உய்த்தறிக?

(ஆ) A, B, C, D என்பவற்றின் கட்டமைப்புகளைத் தருக?

(இ) C எவ்வாறு D ஆக மாற்றலாம்?

(ஈ) ஒரு பரிசோதனையில் 10 கிராம் A இல் இருந்து 5 கிராம் D பெறப்பட்டது. இத்தாக்கத்தின் விளைவுவீதம் என்ன?

(உ) 1. B இல் நைதரசன் இருப்பதை எவ்வாறு காட்டுவீர்?

2. D இல் - OH கூட்டம் இருப்பதை எவ்வாறு காட்டுவீர்?

(ஊ) D ஐ எவ்வாறு பென்சீனாக மாற்றலாம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09.




(அ) 1. தாக்கம் A இற்கான தாக்கு பொருட்களையும் நிபந்தனைகளையும் தருக?

2. B, C என்பவற்றின் கட்டமைப்புகளைத் தருக?

3. 

→ B என்பதும் தாக்கத்திற்கான பொறிமுறையைத் தருக?

4. B, C என்பவற்றை வேறுபடுத்தி அறிய ஒரு இரசாயனப் பரிசோதனை தருக?

5. புரோமோ பென்சீனில் Br பங்கீட்டுப் பிணைப்பால் இணைக்கப்பட்டுள்ளது என்பதை எவ்வாறு நிலைநாட்டுவீர்?

(ஆ) 


| | |
|---|---|
| பென்சீன் 1, 4 இரு ஒயில் குளோரைட்டு | $CH_2-OH$ / $CH_2-OH$ எதேன் 1, 2 இரு ஒல் |

1. இவ்விரு சேர்வையும் தாக்கும்போது உண்டாகும் பல்பகுதியத்தின் சூத்திரத்தை காட்டும் கட்டமைப்பை வரைக?

2. உண்டாகும் பல்பகுதியத்தின் பெயர் என்ன? இது என்ன வகையான பல்பகுதியத் தாக்கம்?

10. (அ) நேரடியாகத் தொழிற்படும் கூட்டங்கள் பென்சீன் வளையத்துக்குத் தொடுக்கப்பட்டிருக்கும்போது அவற்றின் தாக்கங்கள் பக்கச் சங்கிலியில் இணைந்திருக்கும்போது அவற்றின் தொழிற்பாட்டை விட அனேகமாக வேறுபடும். பின்வரும் ஒவ்வொன்றுக்கும் தாக்கத்துக்கான நிபந்தனைகள், விளைவுகளைச் சமன்பாட்டிலுல் தந்து ஒவ்வொரு சோடியையும் வேறுபடுத்தி அறிய இரசாயனப் பரிசோதனை தருக?

1. 

என்பன NaOH உடன் தாக்குதல்.

2. 

என்பன $HNO_2$ உடன் தாக்குதல்.

3. 

என்பன ஒட்சியேற்றும் கருவிகளுடன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) ஒரு படிமாற்றத்துக்கான நிபந்தனை சோதனைப் பொருட்களைத் தருக?

1. $C_6H_5COOH \longrightarrow C_6H_5CONH_2$

2. $CH_3CHOHCH(CH_3)_2 \longrightarrow (CH_3)_2-CHCOOH$

3. $(CH_3)_3-CCH_2CHO \longrightarrow (CH_3)_3-CCH_2-CH(OH)CH(CHO)C(CH_3)_3$

4. $CH_3-COCH_3 \longrightarrow CHCl_3 \longrightarrow HCOOH$

(இ) பின்வருவனவற்றை இரசாயனப் பரிசோதனைகளால் எவ்வாறு வேறுபடுத்துவீர்?

(a) $CH_3CO_2^-NH_4^+$, $CH_3CO\,NH_2$, $C_2H_5NH_3^+Cl^-$

(b) $C_2H_5OH$, $C_2H_5CHO$, $CH_3-COCH_3$

(c) $C_6H_5Cl$, 1 குளோரோ பியூட்டேன் $(C_4H_9Cl)$, $CH_3COCl$

(d) $C_6H_5OH$, $C_6H_5CH=CH_2$, $C_6H_5CH_2OH$

11. இலினலூல் (Linalool) கொதிநிலை 198°C இயற்கையில் உள்ள ஒளியியல் தாக்க சேர்வையாகும். இதன் (+) நிலை தோடை எண்ணெயிலும் (–) நிலை றோஸ் எண்ணெயிலும் உண்டு.




(அ) இவ்வமைப்பில் உள்ள சமச்சீர் அற்ற காபன் எது?

(ஆ) பரிசோதனையினால் (–) நிலை (+) நிலை என்பவற்றில் என்ன வேறுபாட்டினை அறியலாம்?

(இ) இலினலூல் பின்வருவனவற்றைத் தாக்கி உண்டாக்கும் விளைவுகளின் கட்டமைப்பினைத் தருக?

1. Na  2. $Br_2 / CCl_4$  3. $CH_3COCl$

4. கட்டுப்படுத்திய நிபந்தனையில் ஒசோன் பகுப்பு.

(ஈ) தோடை தோலில் இருந்து இலினலூல் பிரித்தெடுக்கப்படும். இலினலூலின் தூய்மை குறைந்த மாதிரி ஒன்றினைப் பிரித்து எடுப்பதற்கு என்ன வகையான செய்முறையைப் பயன்படுத்துவீர்?

12. (அ) 200°C இல் வாயுநிலையில் உள்ள அரோமற்றிக் ஐதரோகாபன் A மிகையான ஒட்சிசனுடன் தகனத்துக்கு உட்படுத்தப்பட்டது. A இன் 10 மி.லி. தகனம் அடைந்தபோது கனவளவு 10 மி.லீ. ஆல் அதிகரித்தது.

1. பென்சீனும் A உம் ஒரே அனுபவ சூத்திரத்தைக் கொண்டிருப்பின் A இன் மூலக்கூற்றுச் சூத்திரத்தைக் கணிக்க?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. A இற்குச் சாத்தியமான இரண்டு கட்டமைப்புச் சூத்திரங்களைத் தருக?

3. மேலே தரப்பட்ட இரு சமபகுதியங்களில் ஒன்று HBr உடன் ஒளியியல் தாக்கம் உடைய B என்னும் சேர்வையைக் கொடுத்தது. B இன் கட்டமைப்பு சூத்திரத்தை எழுதுக?

4. வேறு சாத்தியமான விளைவுகள் இருக்கும்போது மேலே (3) இல் கூறிய விளைவு உருவானது ஏன் என விளக்குக?

5. A இன் ஒரு சமபகுதியத்தில் இருந்து ஆரம்பித்து எவ்வாறு பீனைல் அசற்றலீனைத் தயாரிப்பீர்?

(ஆ) 3 மெதைல் பியூட்டன் – 2 – ஓல் ஐ தயாரிப்பதற்குப் பயன்படுத்தக்கூடிய காபனைல் சேர்வையையும், கிருநாட்டின் சோதனைப் பொருளையும் தருக?

(இ) பின்வரும் மாற்றங்களுக்கான நிபந்தனைகளைத் தருக?

1. 

2. $(CH_3)_2CHOH \longrightarrow CH_3CO_2H$

3. 

13. (அ) $C_9H_{12}O$ என்னும் மூலக்கூற்றுச் சூத்திரத்தை உடைய அரோமற்றிக் சேர்வை Y ஒளியியற் தாக்கம் உடையது. அயடபோம் தாக்கத்துக்கு விடை அளிக்கக்கூடியது. Y இற்குரிய வித்தியாசமான கட்டமைப்புகளைத் தருக?

(ஆ) பென்சீனையும் 2 – நப்தோலையும் மாத்திரம் சேதனச் சேர்வைகளாக உபயோகித்துப் பின்வரும் சேர்வையை எவ்வாறு தயாரிப்பீர் எனச் சுருக்கமாகக் கூறுக?



(இ) 1. $H_2C = C(CH_2CH_3) - CH_2CO_2CH_2CH_3$ என்ற சேர்வை X இன் I.U.P.A.C பெயரை எழுதுக?

2. X ஐ எவ்வாறு $CH_3 - CH_2 - C(=CH_2) - CH_3$ ஆக மாற்றுவீர்?

3. X ----> $CH_2 = C(CH_2CH_3) - CH_2CONH_2$ என்னும் ஒரு படிமாற்றத்துக்கான சோதனைப் பொருட்கள் நிபந்தனைகளைத் தருக?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஈ) பின்வரும் மாற்றங்களை எவ்வாறு இரு படியில் நிகழ்த்துவீர்?

1. 


2. $HCHO \longrightarrow CH_3CO_2H$

3. $CH_3CHO \longrightarrow CH_3COCH_3$

(உ) 1. பீனோல் ஏன் மெதனோலிலும் அமில இயல்பு கூடியது என விளக்குக?

2. பீனோலின் அமில இயல்பு காபோனிக் அமிலத்திலும் குறைவு என்பதை எவ்வாறு ஆய்வு கூடத்தில் செய்துகாட்டுவீர்?

(ஊ) பின்வருவன நடுநிலையான பெரிக்குளோரைட்டுடன் என்ன நோக்கங்களைக் கொடுக்கும்?

1. $HCOOH$ 2. $CH_3COOH$ 3. $C_6H_5COOH$

4. $C_6H_5OH$

14. (அ) $A(C_xH_yO_z)$ என்னும் நடுநிலையான சேதனச் சேர்வை ஒன்று 38.7% காபனைக் கொண்டுள்ளது. இது புரோமின் நீரை நிறநீக்கவில்லை. அத்துடன் பிராடியின் சோதனைப் பொருளுடன் வீழ்படிவு ஒன்றையும்தரவில்லை. A இன் சார் மூலக்கூற்றுத் திணிவு 62. ( C = 12, O = 16, H = 1 )

1. A இன் மிகப் பொருத்தமான மூலக்கூற்றுச் சூத்திரம் யாது?
2. A இன் அநுபவச் சூத்திரம் யாது?
3. A ஐ செறி $H_2SO_4$ உடன் வெப்பமாக்கும்போது பெறப்படும் விளைவுகளின் கட்டமைப்பையும் பெயரையும் தருக?

(ஆ) பின்வரும் மாற்றங்களை ஒருபடி மாற்றமாக செய்வதற்கு நீர் உபயோகிக்கும் தாக்க நிபந்தனைகளையும் சோதனைப் பொருட்களையும் தருக.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) பின்வரும் சோடியை வேறுபடுத்தி அறிய இரு இரசாயனப் பரிசோதனைகள் தருக.




15. (அ) $CH_3 - CH = CH_2$ இற்கு ICl சேர்த்தால் $CH_3\underset{Cl}{CH} - CH_2I$ விளைவாகக் கிடைக்கும்.

1. இதன் காரணங்களைத் தருக?
2. இவ்விளைவு எத்தனை நிலையில் உண்டு? அவை யாவை? இந்நிலையங்களை எவ்வாறு வேறுபடுத்தலாம்?

(ஆ) 1.




என்ற சேர்வையை கட்டுப்படுத்தப் பட்ட நிலையில் ஓசோன் பகுக்கும் போது பெறப்படும் விளைவுகளின் கட்டமைப்பைத் தருக?

2. இங்கு கட்டுப்படுத்தப்பட்ட நிபந்தனை ஏன் அவசியமானது?

(இ)




என்பவற்றை வேறுபடுத்தி அறிய இரசாயனப் பரிசோதனை தருக?

(ஈ) $CH_3Br$ இல் இருந்து $CH_3CH = CHCH_3$ ஐ எவ்வாறு தயாரிக்கலாமெனச் சமன்பாடுகள் முக்கிய நிபந்தனைகள் மூலம் காட்டுக?

(உ) பின்வரும் ஒரு படிமாற்றங்களுக்கான நிபந்தனைகள் சோதனைப் பொருட்களைத் தருக?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. $C_8H_8O_2$ என்னும் மூலக்கூற்றுச் சூத்திரத்திற்குப் பல கட்டமைப்புச் சூத்திரங்களை எழுதலாம். பின்வரும் தாக்கங்களுக்கு விடை தரும் கட்டமைப்புச் சூத்திரங்களை அவற்றின் பெயர்களுடன் தருக?

1. ஒட்சியேற்றும்பொழுது தலிக்கமிலத்தைத் தரும் இரு சேர்வைகள்?

2. பெரிக்குளோரைட்டுடன் ஊதா நிறத்தைத் தருவதும், ஒட்சியேற்றும்பொழுது சலிசலிக் அமிலத்தைத் தராததும் $NaOH/I_2$ உடன் மஞ்சள் வீழ்படிவைத் தரக்கூடியதுமான இரு சேர்வைகள்.

3. சோடாச் சுண்ணாம்புடன் வெப்பமேற்றும்பொழுது, தொலயீனைத் தரவல்ல நிலைச் சமபகுதியமற்ற இரு சேர்வைகள்.

4. பிறிதோர் சமபகுதியம் NaOH உடன் இளஞ்சூடாக்கியபொழுது A, B என்னும் இரு பதார்த்தங்களைக் கொடுத்தது. A நீரில் அரிதாய் கரையும் B நன்கு கரையும், ஈதர் இட்டு வேறுக்கிய பின்னர் B இனை அமிலமாக்கிய $KMnO_4$ உடன் பரிமாறியபொழுது அதன் நிறத்தை நீக்கியது.

5. வேறோர் சமபகுதியம் NaOH உடன் இளஞ்சூடாக்கியபொழுது C, D என்னும் இரு சேர்வைகளைக் கொடுத்தது. D இனை NaOH உடன் உருக்கியபொழுது கரிப்புகையுடன் எரியும் சேர்வை E ஐக் கொடுத்தது. C அயடபோம் தாக்கத்திற்கு விடை தரவில்லை.

6. 4, 5 இல் பெறப்பட்ட A, B, C, D என்பவற்றின் பெயரைத் தருக?

17. (அ) ஒரு சேதனச் சேர்வை X காபன் 40.0% ஐதரசன் 6.67% ஒட்சிசன், 53.33% ஐயும் கொண்டுள்ளது. அதன் அனுபவ சூத்திரத்தைக் கணிக்க?

(ஆ) பௌதீக முறைகளினால், இச்சேர்வையின் மூலக்கூற்று நிறை 90 எனக் கணிக்கப்பட்டது. இதன் மூலக்கூற்று சூத்திரம் என்ன?

(இ) இச்சேர்வை நீரில் கரைந்து 7 இற்குக் குறைவான pH பெறுமானத்தை உடைய கரைசலைத் தருகிறது. இத் தரவில் இருந்து சேர்வையின் அமைப்பைப் பற்றி யாது உய்த்தறிகிறீர்?

(ஈ) சேர்வை $PCl_5$ உடன் தாக்கமடையும்பொழுது $C_3H_4OCl_2$ மூலக்கூற்று சூத்திரமாகவுடைய சேர்வை உண்டாக்கப்படுகிறது.

(அ) தொடக்கம் குறிப்பிடப்பட்டுள்ளவை $X_1$, $X_2$ என்னும் இரு சேர்வைகளுக்குப் பொருத்தமாகலாம். இவ்விரு சேர்வைகளின் கட்டமைப்புக்களைத் தருக?

(உ) சேர்வை $X_1$ ஒளித்தாக்கமற்றது. ஆனால் சேர்வை $X_2$ ஒளித் தாக்கமுடைய இரு சேர்வைகளாகப் பிரிக்கப்படலாம். $X_2$ இனது இரு சமபகுதியங்களையும் வரைக?

(ஊ) நீரகற்றப்படும்போது $X_1$, $X_2$ ஆகியவை ஒவ்வொன்றிலும் ஒரு மூல், ஒரு மூல் நீரை இழந்து முறையே $C_3H_4O_2$, $C_6H_8O_4$ மூலக்கூற்றுச் சூத்திரமாகவுடைய $Y_1$, $Y_2$ என்னும் சேர்வையையும் உண்டாக்குகின்றன. $Y_1$, $Y_2$ ஆகியவற்றின் கட்டமைப்பு சூத்திரங்களை வரைக?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. A, B, C என்னும் மூன்று சேதனவுறுப்புச் சேர்வைகள் $CH_2O$ என்னும் அநுபவச் சூத்திரத்தையுடையன. அவைகளின் மூலக்கூற்று நிறைகள் முறையே 30, 60, 90 ஆகும். B இன் சமபகுதியம் D உம் C உம் $Na_2CO_3$ இலிருந்து காபனீரொட்சைட்டை வெளியேற்ற வல்லன. C அயடபோம் தாக்கத்தைக் கொடுத்தது.

(அ) C இன் கட்டமைப்பு என்ன?

(ஆ) B இற்கு பொருத்தமான கட்டமைப்புகள் எவை?

(இ) B, Na உடன் ஐதரசனைக் கொடுத்தது எனில் B இன் கட்டமைப்பு என்ன?

(ஈ) 1. A உம் B உம் எச் சோதனைப் பொருளுடன் ஒரே மாதிரியான தாக்கத்தில் ஈடுபடும்.

2. இத்தாக்கத்தின்பொழுது நீர் பார்க்கக்கூடிய நிற மாற்றங்கள் (இருப்பின்) தருக?

(உ) A இன் அமைப்பொத்த சேர்வை ஒன்றிலிருந்து தொடங்கி D, C என்பவற்றைத் தொகுக்க?

(ஊ) A ஐ மட்டும் கொண்டு தொடங்கி B உடன் சமபகுதியமாயிருக்கும் எசுத்தரை எவ்வாறு பெறுவீர்?

(எ) C ஐ எவ்வாறு D ஆக மாற்றுவீர்?

(ஏ) A, B, C என்பவற்றில் எது முனைவாக்கப்பட்ட ஒளியின் தளத்தைத் திருப்பும்? ஏன்?

19. (அ) X என்னும் ஒரு சேர்வை 51.7% காபன், 6.96% ஐதரசன் ஒட்சிசன் என்பவற்றை மட்டும் கொண்டுள்ளது. X இன் மூலக்கூற்று நிறை 116 ஆகும்.

1. X இன் மூலக்கூற்றுச் சூத்திரம் என்ன?

2. X இன் நீர்க்கரைசல் தாழ்ந்த pH ஐ கொண்டது. பிளேற்றினம் ஐதரசனுடன் X ஒரு பளிங்குள்ள பெறுதியைத் தருகின்றது. வெளிற்றும் தூள் தொகையுடன் X ஐக் கொதிக்கவைத்தால், விளைவுகளில் ஒன்றாக குளோரபோம் தோன்றுகின்றது. X இன் சாத்தியமான கட்டமைப்புகளைத் தருக?

(ஆ) 1. $C_3H_9N$ என்னும் மூலக்கூற்றுச் சூத்திரத்தை உடைய சேர்வைகளின் கட்டமைப்புகளைத் தருக?

2. மேற்கூறிய சேர்வைகள் $HNO_2$ உடன் உண்டாக்கும் விளைவுகளின் கட்டமைப்புகளைத் தருக?

(இ) 1. $C_3H_6O$ என்னும் மூலக்கூற்றுச் சூத்திரமுடைய $-OH$ கூட்டத்தை கொண்டிராத சேர்வைகளின் கட்டமைப்புகளை எழுதுக?

2. $C_3H_6O_2$ என்னும் சூத்திரத்தை உடைய சேர்வைகளின் கட்டமைப்புகளை எழுதுக?

3. $C_3H_6O_3$ என்னும் சூத்திரத்தை உடைய சேர்வைகளின் கட்டமைப்புகளைத் தருக?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

